(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **104**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 ஒக்தோபர் 04, செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டாற ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ பிரேமலால் ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஆறுமுகன் தொண்டமான்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாகர் பின்வருமாறு அறிவித்தார்:—

I

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் **"இலங்கைப் பொறியியற் பேரவை"** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பிரதியொன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்பதனை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

II

"128அ ஆம் இலக்க பாாளுமன்ற நிலையியற் கட்டளைக்கமையவும் 2016 பெப்ருவரி மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் மற்றும் 2016 யூலை மாதம் 22 ஆம் திகதி என்னால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமாகவும் உயர் பதவிகள் பற்றிய குழுவில் கடமையாற்றுவதற்காக கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை சபைக்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

III

"2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (ஈ) மற்றும் (உ) பந்திகளின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிசிர ஜயகொடி அவர்களை போக்குவரத்து மற்றும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கனக ஹேரத் அவர்கள் அக் குழுவில் சேவையாற்றுவதற்கு தெரிவுக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

**IV**

“2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (ஈ) மற்றும் (உ) பந்திகளின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கனக ஹேரத் அவர்களை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிசிர ஜயகொடி அவர்கள் அக் குழுவில் சேவையாற்றுவதற்கு தெரிவுக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் “ ஸ்ரீ லங்கா இன்டநஷனல் புடிஸ்ட் அகடமி” ஐப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து ஆக்கப்பட்டு, 2016 சனவரி 06 ஆம் திகதிய 1948/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைத் திருத்தி உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஆம் ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 1979/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் “ கொழும்பு இன்டர்நஷனல் நோட்டிகல் அன்ட் இன்ஜீனீரிங் கொலேஜ் (பிரைவேற்) லிமிட்டெட்” ஐப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து ஆக்கப்பட்டு, 2013 யூலை 09 ஆம் திகதிய 1818/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைத் திருத்தி உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 1979/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளைகளை கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான சுதேச வைத்திய அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி ஆறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி நிதியம் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைச் சமர்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் செயலாற்றல் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தால்:** (1) வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ ஹெக்டர் அப்புஹாமியினால், வலுலாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட "**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்"** தொடர்பில் அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ செயிட் அலி சாஹிர் மவுலானவினால், வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட **"2012 / 2013 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேடிவ் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கை**" தொடர்பில் அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) சட்டவிவகாரம் ( ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ அஜித் மானப்பெருமவினால், சட்டவிவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட "**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம்"** தொடர்பில் அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) பிடபெத்தர, கிரிவெல்கலே, தெரங்கல – II ஆம் கட்டம், இல. 51 இல் வதியும் திரு. ஏ.பி. சோமபாலவினது 2016.07.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன சமர்ப்பித்தார்.

(2) வெலம்பட, வேரவல, இல. 77 இல் வதியும் திரு. எஸ்.ஜி. சேனாரத்னவினது 2016.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லக்கி ஜயவர்தன சமர்ப்பித்தார்.

(3) திருகோணமலை, துறைமுக பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் திரு. ரீ.ஏ.டி.ரீ. சேனாநாயக்கவினது 2016.05.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எட்வட் குணசேகர சமர்ப்பித்தார்.

(4) மாத்தளை, உடதென்ன, ஈரியகொல்ல, இல. 10 இல் வதியும் திருமதி ஜி.ஜி. சந்திரிகா கொடலியத்தவினது 2016.08.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

(5) பிபில, நன்னபுராவ, 5 ஆம் கம்பம் எனும் விலாசத்தில் வதியும் திரு. கே.ஜி. கித்சிரியினது 2016.06.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர சமர்ப்பித்தார்.

(6) நாவலபிட்டிய, பள்ளேகம (பஸ்பாகே), தன்கஹஹின்ன, இல. 13, "பிரசன்ன இல்லம்" இல் வதியும் திரு. பி.ஜி. தர்மதாசவினது 2016.07.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஆனந்த அலுத்கமகே சமர்ப்பித்தார்.

(7) வேயன்கொட, தடகமுவ, தடகமுவ சந்தியில் வதியும் திரு. எல்.எச். சரத்சந்திரவினது 2016.09.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹர்ஷன ராஜகருணா சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சேர்பெறுமதி வரி (திருத்தம்):** நிதி அமைச்சர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2016 ஒக்தோபர் 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்வதற்கும் அதனை அச்சிடுவதற்கும் மற்றும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் கட்டளையாயிற்று.

**6. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 2.56 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக" என விளையாட்டுத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.00 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.28 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமைதாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 14 முதல் 16 வரி வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

> ''(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக " ஓரிலட்சம் ரூபாவாக அல்லது அதற்கு மேற்பட்ட" என்னும் சொற்களை" ;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் 4 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புதிய வாசகம்

1 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியினை உடனடுத்து பின்வருவதனை உட்புகுத்துமாறு நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

"முதன்மைச் சட்டவாக்கத்தில் 432அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 432ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 432அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"உரிமைக் கோரிக்கையாளர் இரண்டு மாதங்களினுள் தோன்றுமிடத்தான நடவடிக்கை முறை

432அ.(1) அத்தகைய ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள் இரண்டு மாதங்களினுள் தமது உரிமைக் கோரிக்கையை நிலைநாட்டுமிடத்து, நீதிவானவர், தகுதியானவையென நீதிவான் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளின் மீது,ஆதனமானது அவருக்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென கட்டளையிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறயினும், அத்தகைய ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள் அதன் உடைமையை எடுப்பதற்குச் சம்மதிக்காதவிடத்து, அத்தகையை ஆதனம் நீதிவானின் கட்டளையின் கீழ் விற்கப்படலாம்.

(2) அத்தகைய விற்பனையின் விற்றுவரவுகள், வழக்கிலான தீர்ப்புக் கூறப்படும் வரை, அதற்கெனத் திறக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்படும் வைப்புக் கணக்கொன்றில் அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு. செய்யப்பட்ட ஆதனத்தின் உடைமைக்கு உரித்துள்ள ஆள், அத்தகைய ஆதனத்தின் பெறுமதியைப் பெறுவதற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், கொடுப்பனவானது, வழக்கின் பதியப்பட்ட தீர்ப்புக்கமைய செய்யப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வைப்புக் கணக்கை நிருவகிக்கும் மற்றும் முகாமை செய்யும் முறையை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.".

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் சட்டமூலத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் திருத்தங்களுடன் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**7. சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்போது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமைதாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

சிங்களப் பிரதியின் வாசகம் 2 இற்கு உப வாசகமொன்றாக சட்டவிவகாரம், (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை தொடர்பாக திருத்தமொன்றை கௌரவ அஜித் மானப்பெரும முன்மொழிந்தார்.

"2(1) අ (iii) වගන්තියට ඉක්බිතිව පහත සඳහන් උප වගන්තිය ඇතුළත් විය යුතුය.

'ශ්‍රී ලංකා නීති සංගමයේ සභාපති හෝ උප සභාපති හෝ
ශ්‍රී ලංකා නීති සංගමයේ සභාපතිවරයාගේ නාමිකයකු.' "

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

வாசகம் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 முதல் 7 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்கு வாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (பதுவில ஈரலிப்பு நிலத்தைச் சுற்றாடல் பாதுகாப்பு வலயமாக பிரகடணப்படுத்தல்):** “இப்பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாரளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 6.30 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.16 மணிக்கு பாராளுமன்றம் 2016 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.